**O.S.58/2021**

Date :15.02.2023

பி.சா.1 : சாமுவேல் ஜேக்கப்

பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

எனக்கு தமிழ் நன்கு பேச தெரியும் என்றால் நன்கு பேச தெரியாது என்னால் புரிந்து பதில் சொல்ல முடியும். அம்பாசமுத்திரம் வழக்கறிஞரிடம் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய தமிழில் விபரத்தை சொன்னேனா அல்லது ஆங்கிலத்தில் சொன்னேனா என்றால் தமிழில்தான் சொன்னேன். வழக்கு சர்வே எண் 279 முதல் 308/1 வரையிலானது என்றால் எனக்கு தெரியும். மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர் 34 செண்ட் என்றால் சரிதான். இந்த வழக்கு 3 ஏக்கர் சம்மந்தப்பட்டது என்றால் எனக்கு தெரியும். வடபுறம் வாதியின் சகோதரர் சுடலை மணி நாடார் புஞ்சை என்றால் சரிதான். கிழக்கு பகுதி வாதியின் தந்தை பழனிவேல் நாடார் புஞ்சை என்றால் சரிதான். தெற்கு பக்கம் தங்க துரை நாடாரின் புஞ்சை என்றால் சரிதான். மேற்கு பக்கம் குளக்கரை என்றால் சரிதான். நான்கு பக்க எல்லை விவரம் சம்மந்தமாக பட்டா எண்.509 வருவாய் துறையால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிரந்தர முகவரி கர்நாடகா மாநிலம் பெங்களூர் என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பானை பெங்களூர் முகவரிக்குதான் வந்தது. எனக்கு உள்ளூரில் முகவரி இல்லை. கந்தன் என்பவரை நான் பார்த்துள்ளேன். அவருக்கும் எனக்கும் இதுநாள் வரை நேரடி தொடர்பு கிடையாது என்றால் அவரை எனக்கு தெரியும் ஆனால் பழக்கம் இல்லை. கந்தன் போட்டுள்ள வழக்குரையை நான் படித்துப்பார்த்துள்ளேன். சொத்து பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ணன் ரெட்டியாருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சொத்து பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ணன் ரெட்டியாருக்கு கிரைய சொத்து என்றால் சரிதான். கிரைய சொத்து பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ணன் ரெட்டியார் பெயரில் 1969 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ணன் ரெட்டியார் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 1969 ல் கிரையம் வாங்கிய சொத்தை 18 வருடங்கள் அனுபவம் செய்து 1987 ல் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ணன் ரெட்டியாரைத் தொடர்ந்து

வாதிதான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 1987 ல் ஏற்பட்ட கிரையத்தை தொடர்ந்து வாதி பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்த வரை சர்வே எண்.308/1 ல் உள்ளது என்றால் சரிதான். மொத்தம் உள்ள 8 ஏக்கர் 34 செண்டில் வழக்கு சொத்தை தவிர்த்த மற்ற சொத்தை வாதியின் சகோதரர் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வாதிக்கு வருவாய் துறையில் இருந்து எல்லா ஆவணங்களும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து மானாவரி புஞ்சை என்றால் சரிதான். பாசனவசதி கிடையாது என்றால் சரிதான். அதனால் உடை மரங்கள் வளர்ந்து வருகிறது என்றால் சரிதான். 13.03.2019 ல் உடை மரங்களை வெட்ட வாதி ஏற்பாடு செய்த போது என்னுடைய ஆட்கள் அதை தடுத்து நிறுத்தினர் என்றால் சரிதான். தடுத்து நிறுத்தி விட்டு சொத்து சாமுவேல் ஜேக்கப்பிற்கு பாத்தியப்பட்டது என்றும் கூறினார்கள் என்றால் சரிதான். அதனால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்த பிறகு நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் முதலாவதாக இவ்வழக்கில் கண்ட வாதி டேனியல் ஜெபகரன் என்பவருக்க முகவர் பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்ததாகவும் அந்த முகவர் பத்திரத்தின் அடிப்படையில் நான் கிரையம் வாங்கியதாகவும் கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு கையெழுத்துப்போட தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வாதியின் வழக்குரையை நான் வழக்கறிஞர் மூலம் பார்த்துள்ளேன். அவ்வாறு பார்க்கும் சமயத்தில் அதில் அனைத்து பக்கங்களிலும் கந்தன் தமிழில் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். அதை பார்த்த பின்புதான் என் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. வழக்குரையை பார்வையிட்ட பின்பும் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில், வழக்குரையில் கண்ட ஒப்பம் வாதியின் ஒப்பம் அல்ல என்று கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். கந்தன் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியும். அந்த சாட்சியத்தையும் எனது வழக்கறிஞர் மூலம் பார்த்துள்ளேன். அந்த சாட்சியத்திலும் அவர் தமிழில் தான் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ 1 ல் கந்தன் கையெழுத்து இட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரம் கந்தனின் கையொப்பத்தை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பவர் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்து அதன் அடிப்படையில் நான் கிரையம்

பெற்ற பிறகு கந்தன் என்னை மோசடி செய்து விட்டார் என்று நான் எந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதுபோல் பி.சா.ஆ.1ல் கண்ட கைரேகை கந்தனின் கைரேகை என்பதை நிரூபணம் செய்ய நான் நீதிமன்றத்தின் மூலம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் சாட்சியம் அளித்துள்ள நபர்களை எனக்கு நேரடியாக தெரியாது. சாட்சி கையெழுத்து இட்டுள்ள நபர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. சார்பதிவாளர் முன்னிலையில் கந்தனை அடையாளம் காட்டியது யார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. பவர் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள எல்கையும் வழக்குரையில் கூறப்பட்டுள்ள எல்கையும் வெவ்வேறானது என்றால் நான் அதை பார்க்கவில்லை. கிரையம் வாங்க கூடிய காலத்தில் கந்தன் ஒரு விவசாயி என்பது எனக்கு தெரியும். எனக்கு தெரிந்து கந்தன் வேறு எந்த ஊருக்கு மாற்றுத்தொழிலுக்காக சென்றிருந்தாரா என்றால் எனக்க தெரியாது. முகவர் பத்திரம் ஏற்படுத்திய காலத்தில் அவருக்கு முகவர் பத்திரம் ஏற்படுத்த என்ன அவசியம் ஏற்பபட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. டேனியல் ஜெபகரன் எனக்காக பல்வேறு கிரையங்கள் பெறுவதற்கு ஒத்துழைத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் அவரது பேச்சை நம்பியும் அவர் எனக்கு கிரையங்கள் பெற ஒத்துழைத்துள்ளதாலும் பி.சா.ஆ.1 ஐ நம்பி நான் பி.சா.ஆ.2 ஐ கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அவரை நான் விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் அவர் இருந்தால் விசாரிக்க தயாராக உள்ளேன். அவர் இன்று வரை என்னுடன் தொடர்பில் தான் இருக்கிறார் என்றால் இல்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா என்பது எனக்கு தெரியாது. 19.10.2007 ல் வாதி முகவர்பத்திரம் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள கைரேகை வாதியின் கைரேகை அல்ல என்றும் எனவே வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் பி.சா.ஆ.2 வாதியையும் அவரது உரிமையையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் பெற்ற கிரையப்பத்திரம் அடிப்படையில் சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் நான் ஆண்டு அனுபவித்து வருவதற்கு வருவாய் துறை அலுவலகத்தில் இருந்து எந்த ஒரு ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர் வழக்குரையில் வாதியின் மீதும் அவர்கள் சகோதரர்கள் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதியும் அவரது சகோதரர்களும் கிரையம் ஏற்படுத்துவது பின்னாளில் அதை மறுப்பது அவர்களது வழக்கும் என்று கூறியுள்ளேன் என்றால்

சரிதான். வாதியும் அவரது சகோதரர்களும் ஏமாற்றுவது வழக்கம் என்று நான் சொல்லியுள்ளதில் அதற்கு சாட்சியாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்குதான் அதற்கு சாட்சியாகும். எனக்கு குற்றவியல் நடவடிக்கையும் உரிமையியல் நடவடிக்கையும் தனித்தனியாக தெரியும். உரிமையியல் நடவடிக்கை தங்களது உரிமையை நிலைநாட்ட போடுவது என்றால் சரிதான். குற்றவியல் நடவடிக்கையை பொறுத்த மட்டில் குற்றவியல் நிகழ்வுகளுக்கு உட்பட்டது என்றால் சரிதான். அவர்கள் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்பட்டவர்கள் என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ஏற்கெனவே வாதியின் சகோதரர்கள் சுடலை மணி மற்றும் தங்கதுரை ஆயியோர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ,நான்குநேரியில் அசல் வழக்கு எண்.65/2009 தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு 28.02.2019 ல் தீர்ப்பாணைக்கு உள்ளாக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டு வழக்கு எண்.4/2023, சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்., வழக்கு சொத்தின் உரிமையாளர் கந்தன் என்பதும் அவரது உரிமை மூலத்தை மறுத்தளிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்பதும் எனவே அவரது வழக்கு அனுமதிக்கத்தக்கதாகும் என்றால் சரியல்ல.